
86

மணப்பாடு,

# திவ்ய இஸ்பிரீத்து சாந்து சர்வேஸ்பரன் தேவாலயத்தில் ஸ்தாபிக்கப்பெற்ற பரிசுத்த பொம்பேய் ஜெபமாலை மாதாவின் 25வது ௵ ஜூபிலிக் கொண்டாட்டப் பாமாலை.

1902-1927.

22 NOV 1927



ல்லா ஜனங்களும் என்னைப் பாக்கிய

ன்று பாடி ஸ்துதிப்பார்கள்.

O6:44
N27
178879

மணப்பாடு,

திவ்ய இஸ்பிரீத்து சாந்து சர்வேஸ்பரன்

தேவாலயத்தில் ஸ்தாபிக்கப்பெற்ற

# பரிசுத்த பொம்பேய் ஜெபமாலை மாதாவின்

# 25வது ௵ ஜூபிலிக் கொண்டாட்டப்

# பாமாலை.

1902-1927.



"இதுமுதல் எல்லா ஜனங்களும் என்னைப் பாக்கியவதி என்று பாடி ஸ்துதிப்பார்கள்."

மணப்பாடு

## திவ்ய இஸ்பிரீத்து சாந்து சர்வேஸ்பரன்

தேவாலயத்தில் ஸ்தாபிக்கப்பெற்ற

## பரிசுத்த பொம்பேய் ஜெபமாலை மாதாவின்

## 25வது-வருஷ

# ஜுபிலிக் கொண்டாட்டப் பாமாலை.

---

### திவ்ய இஸ்பிரீத்து சாந்து சர்வேஸ்பரன் பேரில் காப்பு.

("மாற்றறியாத" வென்ற மெட்டு.)

பண்.

தாரகை யம்புலி செஞ்சுடர் வானும்
　　தரணியுஞ் சர்வ முந்தந்த சர்வேசா
சீரணியோர் பொருள் திரிபொருளாகித்
　　திகழுந் தெய்வீகமே சர்வாதிகாரா
பூரணஞான சமேதா விதாதா
　　புறவுருத் தாங்கு விஞோதாவ தீரா
எரணி மாமணப் பாட்டினுக் கரசே
　　இஸ்பிரீத்து சாந்து வெனுமெங்க டேவே.

தித்திக்கும் சர்க்கரை தேன்பசும் பாலும்
　　சீனிமுக்கனி ரசஞ்சேர்ந்த தீம்பாகே
அத்தனே அப்பனே அறிவினுள்ளறிவே
　　அடியவர்க் கபயநன் களித்திடுந் திருவே
முத்திக்குயர் வித்தே மோஹனமா முத்தே
　　முளரியங் கழலிணை முடிமிசை சேர்ப்பாய்
இத்தரை புகழ்மணப் பாட்டினுக் கரசே
　　இஸ்பிரீத்து சாந்து வெனுமெங்க டேவே.

தேவ திருக்குமரன் யோர் தானதியில்
　　தீட்சைபெற விண்மிசை பைஞ்சிறை விரித்து
ஆவலாய் நன்னிழல் அளித்தபொற் புறவே
　　அறநெறி நிறைமதி யருளியகுரவே
பாவப் படுகுழியில் வீழாது நல்ல
　　பாதையினடக்க நின்னருட் டுணைதாராய்
எவருந் துதிமணப் பாட்டினுக்கரசே
　　இஸ்பிரீத்து சாந்துவெனு[illegible] டேவே.

எண்ணிலும் எழுத்திலுங் கருத்திலுமெட்டா
இறையவா பழமறை யின்னுப தேசம்
பண்ணவே சீடர்க்கோர் எரிநாக்கின் ரூபம்
பரிவுயர் காட்சிதந் தருள்வர மீந்தாய்
தண்ணளி தந்திடத் தாமத மேனே
தருவாய் தருவாயுன் றன் தளிர்மலர்ப் பாதம்
எண்ணரி தாமணப் பாட்டினுக் கரசே
இஸ்பிரீத்து சாந்து வெனுமெங்கடேவே.

அன்பிற் குறைவிடம் அமிர்த சஞ்சீவி
அருள்வளன் திருமரி மணநிகழ்போது
இன்புயர் தம்பதி சிந்தை களிப்ப
எழில்தரி சனமருள் மாடப் புருவே.
வன்பவ மாய்கையில் வஞ்சக வாதில்
மருளுமுன் றனயர் புன்மதிதனை யாளாய்
இன்பதி யாமணப் பாட்டி னுக்கரசே
இஸ்பிரீத்து சாந்துவெனு மெங்கடேவே.

வானவன் கபிரியேல் மங்களவார்த்தை
வழங்குறு போழ்துளங் கலங்குறு தாய்க்கு
ஆனவோ ராபத் சகாயெனத் தோன்றி
அவண்மன மயர்வற வுதவுசெந்தேனே
ஊனமிவ் வுலகினை உளதென நம்பி
உரைத்ததும் இழைத்ததும் பொறுத்தருளையா
ஈனமில் மாமணப் பாட்டினுக் கரசே
இஸ்பிரீத்து சாந்து வெனுமெங் கடேவே.

மாதவர் தானவர் வேதிய ருள்ள
மலர் மிசை நடம்புரி மாடப்புருவே
ஆதர வினையன்றி அவனியிலார் கொல்
அடைக்கலம் அடைக்கலம் அருள் புரியையா
பாதக மறலியின் பாதை செல்லாது
பரகதி வழிதனி னடத்துதல்கடனே
ஏதமில் மாமணப் பாட்டினுக்கரசே
இஸ்பிரீத்து சாந்துவெனு மெங்கடேவே

கலைஞரும் அறிஞரும் கரைகண்டவல்ல
கவிஞரும் நிபுணரும் கணிக்கரிதான
நிலையுணர் ஞானமும் நேயமும் மதியும்
நிச்சய வெண்ணமும் நிறை தருவாயே
தலைவனே ஞானத் தகப்பனே ஐயா
தாசரைக் காத்தருள் தயை மிகுசாமி
இலையெனு துயர்மணப் பாட்டினுக் கரசே
இஸ்பிரீத்து சாந்துவெனு மெங்கடேவே.

தசைநரம் பென்பினுற் சமைத்த வோர் வீடு
தசைபல குருமிகள் சார்மலக்கூடு
விசைவெளி யேகிட விட்டது வாழ்வு
வெட்ட வெளிதனில் வீசும் வெற்றோடு
வசையிதை யறியாது மகிழ்கின்ற மனதை
மதுவுமிழ் மலரடி வசத்தினிற் காப்பாய்
இசைதவழ் மாமணப் பாட்டினுக் கரசே
இஸ்பிரீத்து சாந்து வெனு மெங்கடேவே.

மன்னவர் மணிமுடி யனைத்தையுந் தகர்த்து
மாமகரக் கொடி இமவரை நாட்டு
தென்னவன் பாண்டியன் திருமரபோங்கு
செழியரை யாண்டிடத் திருவுள மானாய்
இன்னவர் வேண்டலை இருசெவி கேட்டு
ஈசனே நேசனே இரங்கிடு வாயே
எந்நலமார் மணப்பாட்டினுக் கரசே
இஸ்பிரீத்து சாந்துவெனு மெங்கடேவே.

---

## பரிசுத்த ஜெபமாலை மாதாபேரில் திருப்புகள்.

(இராகம்-தேசிகம்—"இசைந்தசூலம்" என்ற மெட்டு.)

### கண்ணிகள்.

எண்டிசையும் புகழ் கொண்டிட வாழ்த்து ஜெயசீலி
மண்ணுல கோர்மகிழ் விண்ணொளி யொருவரு கமழ்லீலி
தண்பொழிற்காவிலே வைசெய் சதியைத் துடைத்தாயே.
கண்வலைமயக்கு தீயவெம் பேய்தலை புடைத்தாயே

மதிகதிர் மீனொரு நிலையிருந் தொளிர்வது முன்பாலே
கதியெனு மெவரையுங் கலியறப் புரந்தருள் பண்பாலே
துதிமிகு சேவடி நலமது தந்தரு ளென்பாலே
பதிமிசை உனையல தெவர்துணை தயைபுரி யன்பாலே.

வெண்பிறைப் பாத காப்பணியுமா தயைசாலி
சண்டாளர் பதிதர் மதந்தனை யளித்திடு மாமூலி
எண்ணருஞ் சத்துவ மாக்ஷிமை நிறைந்த மகராசி
புண்ணெனச் சித்தம் நொந்தழு வாரெமக் காராசி.

தெண்டிரை சூழ்ந்த திருமண வாபுரி சிறுகோவில்
கொண்டிட வமர்ந்த வாண்டவளுனக் கென்புன்பாவில்
விண்டிடுமேழை சாற்றுமெம் வேண்டலை யருள்வாயே
எண்ணிலா வற்புத நிறைதிரு ஜெபமாலை மரியாயே.

திங்களைப் பதமுஞ் சிரமிசைமீனு மணிதாயே
துங்கரீராறு மரபினர் வங்கிஷ பதியாயே
அங்கையில் சுதனார் கொஞ்சு மகத்துவ முடையாளே
செங்கதிரோனொளி மங்கிட வணிதிரு உடையாளே.

நங்கையாளேவை சிங்கார நந்த வனமேசெய்
பங்கமதனைத் தாங்கவே யெண்ணி வருநீயே
சங்கடமுற்ற பாழடர் பொம்பே நகர்மேவி
இங்கிதமாக செஞ்சுட ரொளிமலர் கமழ்தாவி

கங்குலடர்ந்த பந்தவினையாலுழல் வீணர்
சங்கையிலாது வம்பர்களுறவாலடிகாணார்
இங்கோ வெனக்குன் பதுமமலரடி யருள்தாராய்
செங்கையி லமர்திரு எங்கோனைவேண்டி யிரந்தாளாய்

சங்குமுழங்கிடு மாமணவாபுரி சிறுகோவில்
தங்குமாபெரிய ஆண்டவன் நீயெமக் கொருகாவல்
பங்கேருகந்திகழ் நாயகி தாயகி வருவாயே
சிந்தாகுலந்தவிர் ஜெபமாலையணிதிருமரியாயே.

முத்தொழில் நடத்துங் கர்த்தனை வெல்லை மலையோரம்
சத்தபம் மாடும் நித்தமு மடையுமோ ரடிவாரம்
சித்தமுவந்து பெற்றிடும் வரம்நீ யடைந்தாயே
கொற்றவர் மூவர் துத்தியங் கண்டுள மகிழ்ந்தாயே.

சூத்திரம் விளைக்கும் சித்திரவிழியார் மயலாலே
நித்தமு மலைந்து சத்துவந் தொலைந்தயர் மெலிவாலே
கத்திடு மேழை சித்திபெறுவதுன் னருளாலே
கைத்தல மமருங் கர்த்தனெம்மாதிப் பொருளாலே.

வித்தக மிகுத்த உத்தம வளனர் மனையாளே
நித்திலம் பொருவு சாத்வீக தண்ணளி யுடையாளே
எத்திறத் தோர்க்கும் வாய்க்கரி தானவெம் மாத்தாளே
சொற்றிறமில்லா வேழையென் விண்ணப்பம் மதித்தாளே.

சித்திரங் குவிந்த திருமணவாபுரி சிறுகோவில்
க்ஷேத்திர மமர்ந்த வாண்டவனுனக்கென் புன்பாவில்
அத்தனென்னுமெம் மப்பனை யிரந்துநீ அருள்வாயே
பத்தர்கள் துதிக்கு மருளுறு ஜெபமாலை மரியாயே.

---

## வேறு

(தேசிகதோடி—"மருவேசெறித்த" என்றமெட்டு)

அலைமேல் நடக்கு மொருமா முதற்கு
அனையா யுதித்த மகராசி
அரவார் சிரத்தின் வீடமே யுடைத்த
அடிதே டெமக்கும் ஒருதாயே

சிலைவேட னிட்ட கணைமார்பு பட்ட
சிறுயானை யொப்ப திலமீது
திசைவேறு தப்பி மனவாதை யுற்ற
செயலோ வகுக்க முடியாது

கலைமேவு மர்த்த மதிநீடு பெற்ற
    கனசே வடிக்கு ளமரேனே
கடலே நிகர்த்த தயைசே ரிடத்தை
    கடையே னெனக்கும் அருள்வாயே
மலையே பழித்த நிலையே சுவர்க்க
    வழியே யிரக்க மிகுதாயே
மணவா புரிக்கண் மணியாச னத்தில்
    வளர்மா வரத்தி மரியாயே.

178879

எரியே பரப்பு கதிரோனு டுக்கை
    இடைமீ துடுத்த பிரதாபி
இசைவாண ருக்கு மரிதான மிக்க
    எழிலே மிகுத்த வதிரூபி
எரிநாய் களித்து கெடிதே புசிக்கும்
    நவைசேர் விடக்கி துணராது
நறைசாறு புட்ப களபாதி விட்டு
    நயமாய் வளர்க்க நினைவேனே
விரிபூ வையொப்பு பதநீழல் தொட்டென்
    வினைதா னொழிக்க அறியேனே
விழலான புத்தி யதைநீ டுபெற்றி
    மெலிவான பித்தன் அருள்வாயே
மரியே யெனக்கதறி யழுமோர் கிளிக்கு
    வருமா விபத்தை யொழிதாயே
மணவா புரிக்கண் மணியாச னத்தில்
    வளர்மா வரத்தி மரியாயே

வரைவாய் பிளந்து அனலே சொரிந்து
    வழிதோறி ழிந்து நதிபாய
வதைநீடு பொம்மை நகர்மீ தெழுந்து
    வரம்நீ பொழி[illegible] அறியேனே

உரைசூழுமுன்ற னருள்தேடி வந்து
உபகாரமின்றி மனமாழ்கி
உலைவோடுசென்ற தெவராகு மிந்த
உலகோரறிந்த செயலீதே
திரையூடெ றிந்த மெலிவார் துரும்பு
சிறிதோ வருந்தும் அதுபோல
ஜெகமீது துன்ப மிகவாடு கின்ற
சிறியேனை யன்பொ டருள்வாயே
மறையே சுகந்த மணமே வசந்த
மலரே திருந்து கலையூறும்
மணவா புரங்கொண் மணிமே டைநன்கு
வருதூய சந்த மரியாயே

மலடாய் வருந்து மகளீர் தமக்கு
மகவே யளிக்கு முபகாரி
மலர்நேர் பதத்தி னிழலாம் நலத்தை
வளமாயியற்றும் அருள்நாரி
கலமாழி விட்டு சுகமே நினைத்த
கரைசேர வைக்கு மெழில்மீனே
கலைசேரும் நட்பு நிலைசேரு மெச்சு
கவிசேரும் நித்த முனைநாட
பலகு திழைத்தென் மனவேத னைக்குட்
படவே விடுத்த பழிகார
படுபேயை விட்டு னருள்சேர் பதத்திற்
பரிவோடி ருக்க அருள்வாயே
மலமே யொழித்த நலமே செழித்த
மயமே கலைக்கு முதலாகும்
மணவா பரிக்கண் மணியா சனத்தில்
வள ரா வரத்தி மரியாயே

உருவாகு தொத்து முடைநோய்கள் சற்று
　　மூலவா தழித்து　　　　விடவேணும்
உனோடு சித்த மகலா திருக்க
　　உணர்வே கொடுத்து　　　　வரவேணும்

வருவாய் பெருக்கு தொழிலே செழித்து
　　மகவோர் மகிழ்ச்சி　　　　யுறவேணும்
வளர்கை யற்பு தெருள்ஞான வித்தை
　　மனமேவு சித்தி　　　　பெறவேணும்

திருவான கர்த்தன் மலைமீ துரைத்த
　　தெளிவான பத்து　　　　விதிநாடி
சிதறாத பக்தி குறையாத விர்த்தி
　　தினமாக வெற்றி　　　　தரவேணும்

மருவார் பதத்தி அருள்வான் பாத்தி
　　மதிநேர் முகத்தி　　　　அறிவாயே
மணவா புரிக்கண் மணியா சனத்தில்
　　வளர்மா வரத்தி　　　　மரியாயே

———

வேறு.

(இராகம்-சாருகேசி—"வங்காரமார்பிலணி" என்ற மெட்டு)

அம்பாரு மாயவிழி மீதுவரு தீயவிடம்
　　உண்டார நேகரவ ராசைமுடி வானதென
அந்தோ மஹாதுயர மோதவரை காவியமு—முடியாதே

அன்போடு பேசியுற வாடியிசை பாடிவிழல்
　　சந்தாப வாரிதியில் மூழ்கபல சூதுபுரி
அஞ்சாத வீரயம தாதர்பழி காரரிவர்—உறவாமோ

வம்பான பாதையிரு மாந்திய மோடவழி
　　சண்டாள ரோகமுடல் தாவியுரு மாறவிடும்
மங்காத ஈனவசை யாயுள்முடி வாயிடினு—மொழியாதே

மன்றாடு வாரிடர்வி னூடிதனி லோடவருள்
தந்தாளு தாயுனது பாதமலர் நீழலொடு
மஞ்சாடு தூயபர லோகசுக வாழ்வுமினி—கிடையாதே

செம்பானு மேயொழுக மாமலையி னீடுமிரு
துண்டான ஓர்சிலுவை மீதுமுனை யாணிகொடு
செம்பாத மோடுகர மூடுருவ வேயறைய—வதைநீட

சிந்தாத நேயமொடு பாவியெமை யாளவென
எஞ்சா உதாரமோடு ஆவிவிட மேவுமொரு
செஞ்சோதி யாமிறைவ னுதரவு மேயகல்வர்—கிசமீதே

நம்பாது பாவிமன மோடுபல தீயநெறி
சென்றோடி யோடியனல் மேவுமெமை காயுருகி
நைந்தேனுனர்பதம் விடேனினிமறு துதயை—பொழிவாயே

நந்தீனு துய்க்ரள மார்புணரி யோரமதில்
வந்தீடி லாதுவள னர்மணவை மாநகரில்
நண்பாக வேவளரு தாயஜெப மாலையுயர்—மரியாயே

மகா-ள-ள-ஸ்ரீ நசரேன் தேரோஸ் அவர்களால்
இயற்றப்பெற்றது.

வேறு

("மலடி வயிற்று மகன்போலே" என்ற வர்ணமெட்டு.)

உலக மனைத்தோர் மொழியாலே—தரு
பரம திரித்வ முதலோனை—இவண்
உதவு மகத்வ மரியாயே—எனதருள் கூர்வாய்

அலவன் மிதிக்கும் அடியாளே—ஒளிர்
அருண னுடுக்கும் மடியாளே—தா
ரகையே கதிக்கும் முடியாளே—திருவிழிபாராய்

வலபரன் பத்துத் தகவுரையான்—ஒரு
பொழுது மகத்தில் நினைவிலனும்—பல
வகைவகை துட்டத் தனமுடையேன்—முழுமதிகேடன்

தப ஜெப முற்றும் இலனுக்ப்பு
தல மலை வுற்றே யவமாக—மறு
ஜனன மெடுத்தும் விழலான—கொடும் பதராளன்

மனைவியுமக்கள் சோதாரும்—இன
ஜனமொடு மித்ரர் யாவரையும்—துணை
யெனநினைத் தத்தன் றூய்கழலை—தினமறந்தேனே

வனிதை யரிச்சை யதனுலே—அனு
தினமுமே கெட்ட வழியேகித்—தீ
வினைகொ ளசுத்த னெனும்வேளை—எனை இகழாதே

தனய ரசுத்தங் கழுவாத—ஒரு
அனையு மிகத்தில் உளவாமோ—பவச்
சகதி யகற்றுன் மகன்நானே—என் அனைநீயே

அமல பரற்கோர் கொடுத்ரோகி—மிக
அழுகை மனஸ்தா பத்தோடு—நின
தழகிய பத்ம பதம்நாடி—இதோ பணிகின்றேன்

தவறு பொறுத்தே யருள்புரிய—நின்
தனயன்முன் சற்றே புகலுவையேல்—மா
தயைபெறு தற்கோர் தடையிலையே—இதுததியாளாய்.

---

மகா-ா-ா-ஸ்ரீ ஜோசப் பிரான்சீஸ்க் கோரேயரா அவர்களால்
இயற்றப்பெற்றது.

(இர[illegible]கம் [illegible]யாகு—“தாயைவிட்டு வந்து காட்டில்”என்ற மெட்டு)

பல்லவி.

மனதிரங்கியே தமியேர்க்குன்பத
மலர்தந்தாதரியே ஜெப—மாலைமாமரியே

அநுபல்லவி.

கனபவவினைக் கடலிலாழ்ந்துளங் கலங்கி நைகின்றேன்
நினதருந்தன யனையிரந்துநீ நீக்குவாய் துன்பம்
உண்டோ—நினையன்றி தம்பம் உண்டோ—நினையன்றி தம்பம்
உண்டோ—நினையன்றி தம்பம். (மன)

சரணம்.

மல்பிரஞ்சுநாட்டிற் சாமிநாதர்க்கு ஜெப மாலைநீதந்தே
அல்பிசென்சென்னும் பதிதர்செய்தீங்கை அகற்றினாய் நீயே
உனை—அண்டினேன் தாயே உனை—யண்டினேன் தாயே
உனை—அண்டினேன் தாயே. (மன)

பாபத்தைவிட்டு ஆதிபரமன்மேல் பரம தாயின்மேல்
மாபக்திவைத்த னுதினமும்ஜெப மாலை நான்சொல்ல
அழன்—மண்ணையை வெல்ல அழன்—மண்ணையை வெல்ல
அழன்—மண்ணையை வெல்ல. (மன)

நின்னருஞ்ஜெப மாலையாலிந்த நிலத்தினில் விளைந்த
மன்னுநலங்கள் சொலஇயல்பதோ மைந்தனா மெனையே
நல்ல—வழியிற்சேர் அனையே நல்ல—வழியிற்சேர் அனையே
நல்ல—வழியிற்சேர் அனையே. (மன)

மகா-ள-ள-ஸ்ரீ

மிக்கேல் பேதுரு கோஸ்த அண்ணாவியாரவர்களால்
இயற்றப்பெற்றது.

பரதகுல மித்திரன் பிரிண்டிங் பிர[illegible] 43, எம்பார்தெரு, தூத்துக்குடி

பரதகுலமித்திரன் பிரிண்டிங்பிரஸ்,-43,எம்பார்தெரு,

தூத்துக்குடி.